1990 ஏப்ரல் 5]

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 21—மீனளம்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப் பின்கீழ் ரூ. 10,04,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பொதுப் பணித் துறைக்கு சொந்தமான பெரிய மற்றும் சிறிய அணைக் கட்டுகளில் கிடைக்கும் மீன்களை அந்தத் துறையினரே அன்றாடம் பிடித்து விற்பனை செய்வதற்குப் பதிலாக ஒவ்வொரு ஆண்டும் பொது ஏலத்தில் விட்டு வருமானத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,04,43,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பெருமளவில் பிடிக்கப்பட்டும் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை ஏதும் இல்லாததால், கேரளாவிற்குக் கொண்டு செல்லப்படுகின்ற நிலை காரணமாக இம் மாவட்ட மக்களுக்கு உரிய பயன் கிடைப்பது தடைபடுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர் மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,04,43,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS